# சங்கரன்கோவில் நகராட்சி

2019-ம் ஆண்டு நவம்பர் மாதம் 29.11.2019ம் தேதி காலை 11.00 மணிக்கு அவசரக்கூட்டம்

**பொருள் எண்- 812**

அரசாணை எண்.150 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.19.11.2019ன்படி 01.04.2018 முதல் சொத்துவரி சீராய்வு செய்யப்பட்ட சொத்துவரிவிதிப்புகளுக்கு 31.03.2018ற்கு முன்பிருந்தவாறே மாறுதல் செய்து ஆணைபெறப்பட்டுள்ளது. மேற்படி அரசாணை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

தீர்மானம் – பதிவு செய்யப்பட்டுள்ளது.

**பொருள் எண்- 813**

சங்கரன்கோவில் நகராட்சிப்பகுதியில் நடத்திவரும் தொழில்களுக்கான உரிமக்கட்டணம் (D&O) வசூலித்தல் பற்றிய அறிவிப்பானது 1920-ம் ஆண்டைய தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 249 மற்றும் 250-ம் பிரிவின்படி உரிமம் மற்றும் நிறுவன அனுமதி கட்டணங்கள் திருத்தியமைக்கும் அதனை அரசிதழில் வெளியிடுவதற்கும் நகர்மன்றத்தின் தீர்மான எண்.701, நாள் 31.07.2019ம் தேதியில் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. திருத்தியமைக்கப்பட்ட கட்டணங்கள் தொடர்பாக பொதுமக்களிடமிருந்து ஆட்சேபனை மற்றும் கருத்துருக்கள் பெறுவதற்கு மக்கள் குரல் தினசரி நாளிதழில் 04.11.2019ம் தேதியில் விளம்பரம் செய்யப்பட்டது. பொதுமக்களிடமிருந்து எந்தவித ஆட்சேபனையும் பெறப்படவில்லை. எனவே, 1920-ம் ஆண்டைய தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 249 மற்றும் 250-ம் பிரிவின்படி உரிமம் மற்றும் நிறுவன அனுமதி கட்டணங்கள் திருத்தியமைக்கப்பட்டுள்ளதை இறுதி செய்து ஒப்புதல் பெறவும், மாவட்ட அரசிதழில் (Gazatte Notification) பிரசுரம் செய்யவும் அதற்காகும் செலவினத்திற்கும் மன்றம் அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

1920-ம் ஆண்டைய தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 249 மற்றும் 250ம் பிரிவின் படி உரிமம் மற்றும் நிறுவன அனுமதி கட்டணங்கள்.

| வ.எண். | தமிழ்நாடு மாவட்ட நகராட்சி சட்டப்பரிவு | ஊரிமம் என்ன காரியத்துக்கு உரியது அல்லது அனுமதி தேவை என்ற விபரம் | தற்போது நிர்ணயிக்கப் பட்ட உரிமக் கட்டணம் ஒரு ஆண்டிற்கு | புதிதாக நிர்ணயிக்கப்படும் உரிமக் கட்டணங்கள் ஒரு ஆண்டிற்கு |
|---|---|---|---|---|
| 1. | 249 | நெல் வேகவைத்தல் | 300 | 400 |
| 2. | 249 | ஊது பத்தி தயார் செய்தல் | 60 | 100 |
| 3. | 249 | செயற்கை உரம் தயார் செய்தல் / சேமித்தல் / விற்பனை செய்தல் | 150 | 200 |
| 4. | 249 | அரசு அனுமதி பெற்று வெடி மருந்து (பட்டாசு) தயாரித்தல் / சேமித்தல் / விற்பனை செய்தல் | 400 | 600 |
| 5. | 249 | தீப்பெட்டி தயாரித்தல் / சேமித்தல் | | |
| 6. | 249 | மாட்டுத் தீவனங்கள் / பருத்தி / பஞ்சு / விதை சேமித்தல் / விற்பனை செய்தல் | | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | பெரியது | - | 200 |
| | | சிறியது | - | 100 |
| 7. | 249 | அரசால் அங்கீகரிக்கப்பட்ட மதுபான விற்பனைக்கடை (Wine Shop) | 1000 | 1500 |
| | | அரசால் அங்கீகரிக்கப்பட்ட மதுபான விற்பனைக்கடை மற்றும் தங்கும் வசதி (Lodge with Bar) | 1500 | 2500 |
| | | தங்கும் வசதி (Lodge with Bar) | - | 1000 |
| | | மதுபான விற்பனை மற்றும் உணவுடன் கூடிய தங்கும் விடுதி (Bar, Lodge with Restaurant) | 3000 | 3500 |
| | | உண்ணும் வசதியுடன் கூடிய தங்கும் விடுதிகள் (Lodge with Restaurant) | - | 2500 |
| 8. | 249 | **சிற்றுண்டி / சாப்பாடு வழங்கப்படும் இடம்** | | |
| | | சிற்றுண்டி மட்டும் | 100 | 200 |
| | | சாப்பாடு மட்டும் | - | 200 |
| | | **சிற்றுண்டி / சாப்பாடு** | | |
| | | பெரியது (5 மேஜைக்கு மேல்) | 1000 | 1500 |
| | | சிறியது (5 மேஜைக்கு வரை) | 500 | 800 |
| | | டீ, காபி கடை | 80 | 200 |
| | | டீ, காபி மற்றும் மாவினால் செய்த பதார்த்தங்கள் தயாரிப்பு / விற்பனை | 100 | 200 |
| 9. | 249 | அடுமனை பொருட்கள் தயாரித்தல் | | |
| | | லாலா மிட்டாய் தயாரிக்க / விற்பனை | 200 | 300 |
| | | இனிப்புகள் தயாரித்தல் / விற்பனை | 100 | 200 |
| | | அடுமனை (Bakery) பொருட்கள், ரொட்டி தயாரித்தல் / விற்பனை | - | 250 |
| | | இனிப்பு பதார்த்தங்கள், காரம், அடுமனை, பொருட்கள் தயாரித்தல் | - | 300 |
| | | **இனிப்பு பதார்த்தங்கள் / அடுமனை, காரப்பொருட்கள் விற்பனை செய்தல்** | | |
| | | பெரியது | - | 500 |
| | | சிறியது | - | 300 |
| 10. | 249 | பனிக்கட்டி மற்றும் பால் சம்மந்தப்பட்ட பொருட்கள் / ஐஸ்கிரீம் தயாரித்தல், சேமித்தல், விற்பனை செய்தல் | 200 | 300 |
| 11. | 249 | சோடா, கலர்பானம், சர்பத், குளிர்பானங்கள் தயாரித்தல் / விற்பனை செய்தல் | 200 | 300 |
| 12. | 249 | பால் பண்ணை | 500 | 700 |
| | | பால் வியாபாரம் | 150 | 200 |
| 13. | 249 | **மாமிசம் விற்பனை செய்தல்** | | |
| | | கோழி இறைச்சி விற்பனை | 2500 | 2700 |

| | | | | |
|---|---|---|---|---|
| | | ஆட்டிறைச்சி விற்பனை (நகராட்சி சந்தையில்) | 250 | 500 |
| | | ஆடு அறுப்பவர் | 25 | 50 |
| | | ஆட்டிறைச்சி விற்பனை | 2000 | 2200 |
| | | மீன் விற்பனை | 1000 | 1200 |
| 14. | 249 | உலர்ந்த மீன் கருவாடு சேமித்தல் / விற்பனை செய்தல் | 100 | 200 |
| 15. | 249 | முட்டை விற்பனை செய்தல் | 100 | 200 |
| 16. | 249 | ஆரிசி / நவதானியங்கள் சேமித்தல் / விற்பனை | - | 500 |
| 17. | 249 | **பல் பொருள் அங்காடி சேமித்தல் / விற்பனை** | | |
| 18. | | பெரியது (500 ச.அடிக்கு மேல்) | - | 1000 |
| | | சிறியது (500 ச.அடிக்குள்) | - | 750 |
| 19. | 249 | காய்கறி விற்பனை | 50 | 100 |
| | | பழங்கள் விற்பனை | - | |
| | | பெரியது (200 ச.அடிக்கு மேல்) | - | 300 |
| | | சிறியது (200 ச.அடிக்குள்) | - | 150 |
| 20. | 249 | சாயம் போடுதல் | 150 | 200 |
| 21. | 249 | மண்ணெண்ணெய் சேமித்தல் / விற்பனை செய்தல் | 150 | 250 |
| 22. | 249 | லேத் | 100 | 200 |
| | | டயர் புதப்பித்தல் | 200 | 300 |
| | | வல்கனைஷிங் | 50 | 100 |
| 23. | 249 | மருந்தகம் (குழந்தைகள் உணவு) | | |
| | | சேமித்தல் | - | 200 |
| | | விற்பனை | - | 100 |
| 24. | 249 | ஆமிலம் / வார்னிஷ் / பெயிண்ட்/ சுண்ணாம்பு / கிருமிநாசினிகள் சேமித்தல், விற்பனை செய்தல் | 80 | 100 |
| | | மது கஷாயம், துதிராட்சி, அனிஷ்டம், பழரசம் போன்ற ஆயுர்வேத மருந்துகள் | 300 | 300 |
| 25. | 249 | எழுது பொருட்கள், பேப்பர், பேன்ஸி பொருட்கள் | - | 200 |
| 26. | 249 | பெட்டிக்கடை | 40 | 100 |
| 27. | 249 | காபி தூள் விற்பனை | - | 100 |
| 28. | 249 | டயர்கள், பேப்பர்கள், பிளாஸ்டிக், தகரம், இரும்பு போன்ற பழைய பொருட்கள் சேமித்து வைக்குமிடம் | - | 200 |
| 29. | 249 மற்றும் 250 | **இயந்திரங்கள் நிறுவுதல் மற்றும் இயக்குதல் (மின்சக்தி அல்லது இதர சக்திகள்)** | ஒரு எண்ணத்திற்கு | ஒரு எண்ணத்திற்கு |
| | | a. ரோட்டரி | 200 | 300 |
| | | b. எக்ஸ்பெல்லர் | 300 | 400 |
| | | c. டெக்ஸ்பெல்லர் | 400 | 500 |
| | | d. நாட்டு செக்கு | 60 | 100 |
| | | e. உணவுக்கு அல்லாத இதர எண்ணெய் வகைகள் தயாரிக்கும் இயந்திரம் | 150 | 200 |
| | | f. காபி கிரைண்டர் | 50 | 100 |
| | | g. காபி ரோஸ்டர் | 50 | 100 |
| | | h. காபி பாலிஷர் | 50 | 100 |

| | | | | |
|---|---|---|---|---|
| | | i. மாவு கல்லர் | 50 | 100 |
| | | j. ரைஸ் கல்லர் | 50 | 100 |
| | | k. டிஸ் இண்டகிரேட்டர் | 50 | 100 |
| | | l. கீல் அல்லது சைகர் | 50 | 100 |
| | | m. கப்பாஸ் கிளீனர் | 50 | 100 |
| | | n. பருப்பு கிளீனர் | 80 | 150 |
| | | o. விண்னோயர் | 50 | 100 |
| | | p. டிக்கார் டிக்கேட்டர் | 100 | 200 |
| | | q. காட்டன்ஜின் / பிரசிங் | 100 | 200 |
| | | r. அச்சு இயந்திரம் | 100 | 200 |
| | | s. ஸ்டீம் பாய்லர் | 150 | 200 |
| | | t. ஐஸ்புருட் மிஷின் | 20 | 100 |
| | | u. சா மில் | 200 | 500 |
| | | v. சோடா கலர் பானம் தயார் செய்யும் இயந்திரம் | 100 | 200 |
| | | w. ஏர் கம்பரஷர் | 50 | 100 |
| | | x. லில்லோரின் மிஷன் | 50 | 100 |
| | | y. இதரவை | - | 100 |
| 30. | 250 | தோழிற்சாலை இயந்திரம் நிறுவுதல் (மின்சக்தி அல்லது இதர சக்திகளால் இயக்குவது) | | |
| | | 1-5 HP வரை | - | 200 |
| | | 6-10 HP வரை | - | 300 |
| | | 11-20 HP வரை | - | 500 |
| | | 21-40 HP வரை | - | 1000 |
| | | 41 HP க்கு மேல் | - | 2000 |
| 31. | 249 | தொழிற்சாலை இயந்திரம் பயன்பாடு (மின்சகதி அல்லது இதர சக்திகளால் இயக்குவது) | | |
| | | 1-5 HP வரை | 20 | 50 |
| | | 6-10 HP வரை | 40 | 100 |
| | | 11-20 HP வரை | 150 | 300 |
| | | 21-40 HP வரை | - | 400 |
| | | 41 HP க்கு மேல் | - | 600 |
| 32. | - | பிறப்பு / இறப்பு சான்றிதழில் திருத்தம் மேற்கொள்ள நிர்வாகக் கட்டணம் (கொடிநாள் நிதிகணக்கு) | - | 100 |
| 33. | - | கழிவுநீர் ஊர்தி (Septic Tank) நகராட்சியில் பதிவு செய்தல் வருடம் ஒருமுறை | | |
| 34. | | இதர வகைகள் | - | 100 |

1. ஒரே இடத்தில் பலவகைப்பட்ட வியாபாரம் செய்யும்பொழுது அவைகளில் அதிகப்படியான உள்ள ஒரு வியாபார உரிமக் கட்டணம் வசூலிக்கப்படும்.
2. உரிமையாணை கோரி அனுப்பப்படும் போது அதற்கான நியமிக்கப்பட்ட விண்ணப்பத்தில் பூர்த்தி செய்தும் அதில் இரண்டு ரூபாய் மனு ஸ்டாம்ப் ஒட்டப்படும் அதற்குரிய கட்டணங்களும் செலுத்தப்பட வேண்டும். இல்லையெனில் மேற்படி விண்ணப்பம் செல்லத்தக்கதல்ல.
3. தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டத்தில் 249-வது பிரிவின் படி பிரத்தியோகமாக குறிக்கப்பட்ட வகையாறாக்கள் தவிர மற்றவைகளுக்கு ஒரே இடத்தில் பல

தொழில்களோ அல்லது வியாபாரங்களோ நடத்தினால் ஒவ்வொரு தொழிலுக்கும் பிரத்தியோக உரிமையாணைக் கட்டணங்கள் வசூலிக்கப்படும்.

4. ஊரிமையாணை புதுப்பிக்கவோ அல்லது புது வியாபாரம் தொடங்கவோ கோரி அனுப்பும் விண்ணப்பம் 30 நாட்களுக்குள் குறையாமல் முன்னதாக இருக்க வேண்டும். (அதாவது ஒவ்வொரு ஆண்டும் மார்ச் திங்கள் முதல் நாள் அல்லது அதற்கு முன்பு) அப்படி இல்லாத பட்சத்தில் சாதாரணமாக வசூலிக்கப்படும் கட்டணத்துடன் 25 சதவிகிதம் அதிகப்படியாகச் சேர்த்து கட்டணம் வசூலிக்கப்படும்.
5. ஒரு வியாபாரம் அல்லது தொழில் உரிமையாணை வழங்கப்பட்ட குறிப்பிட்ட காலத்திற்கு முன்பு நிறுத்தப்பட்டுவிட்டால் அந்த உரிமையாணைத் தொகை திருப்பித் தரப்படமாட்டாது.
6. நகர்மன்றத்தின் 09.01.1986ஆம் தேதியன்று சங்கரன்கோவில் நகர்மன்றக்கூட்டத்தில் 14 ஆம் எண் தீர்மானத்தின் பிரகாரம் இந்நகராட்சியால் 1920ஆம் ஆண்டின் திருத்தப்பட்ட தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் 5ஆவது தொகுதயின் 321, 328, 329ஆவது பிரிவுப்படி பிரசுரிக்கப்பட்ட திருநெல்வேலி மாவட்ட அரசிதழில் அறிவித்தப்படி திருவிழாக் காலங்களில் உரிமையாணைக் கட்டணங்கள் வசூலிக்கப்படும்.
7. தீப்பெட்டி, பட்டாசு அல்லது கருமருந்து தயாரித்தல், சேமித்தல் அல்லது விற்பனை செய்தல், மண்ணெண்ணெய் சேமித்தல் அல்லது விற்பனை செய்தல் போன்ற இடங்களுக்கு விண்ணப்பம் செய்வோர் அந்தந்த இடங்களுக்கு கோட்ட தீயணைப்பு அதிகாரியிடம் ஆட்சேபனை இல்லாததற்கான சான்றிதழ் பெற்று விண்ணப்பம் படிவத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும். அப்படி இல்லாமல் வரும் விண்ணப்ப படிவங்கள் செல்லத்தக்கவை அல்ல.
8. பொதுவாக அரசாங்கத்தாலோ அல்லது இந்நகராட்சியாகலோ அவ்வப்போது இயற்றப்படும் சட்ட திட்டங்களுக்கு உட்பட்டுத்தான் உரிமையாணை நிறுவன அனுமதி வழங்கப்படும்.
9. அட்டவணையில் தெரிவிக்கப்பட்டுள்ள இனங்களை தவிர்த்து மீதமுள்ள இனங்கள் அட்டவணையில் இருந்து நீக்கம் செய்யப்படுவதுடன், லாண்ட்ரி, முகச்சவரம், முடி வெட்டுதல், மண்பானை சூளை, ஆடு, மாடு வளர்த்தல், புல், வைக்கோல் சேமித்தல், ஒலைபொருள், போட்டோ, ஸ்டுடியோ போன்றவற்றிற்கு விலக்கு அளிக்கப்படுகிறது. திருத்தியமைக்கப்பட்ட விகிதங்கள் 2020-ம் ஆண்டு ஏப்ரல் 1ம் நாள் முதல் அமுலுக்கு வருகிறது..
10. உரிமதாரர் ஒவ்வொரு ஆண்டும் தனது கடை D&O உரிமத்தை பிப்ரவரி மாதத்தில் புதுப்பிக்க வேண்டும். அபாயகரமானதும் அருவருக்கத்தக்கதுமான நிறுவனங்களுக்கு உரிமக்கட்டணம் பிப்ரவரி மாதம் மட்டும் அபராதமின்றியும், இதர மாதங்களில் புதுப்பிக்க 25% அபராதத்துடன் சேர்த்து உரிமக்கட்டணம் வசூலிக்கப்படும்.

தீர்மானம் – அனுமதிக்கப்படுகிறது

**பொருள் எண்- 814**

சங்கரன்கோவில் நகராட்சி பகுதியில் அமைந்துள்ள அருள்மிகு சங்கரநாராயண சுவாமி திருக்கோவிலுக்கு வரும் வாகனங்கள் மற்றும் வெளியூ வாகனங்கள் நிறுத்தம் செய்வதற்காக தறபோது நான்குரத வீதிகளான வடக் ரத வீதி, தெற்குரத வீதி மேலரத வீதி மற்றும் கீழரத விதி ஆகிய சாலை தெருக்களில் நிறுத்தம் செய்யப்பட்டு வருகிறது. இதனால் பேருந்து போக்குவரத்திற்கும், பொதுமக்களுக்கும் இடையூறாக இருந்து வருகிறது. மேலும், மேற்கண்ட சாலை ரதவீதி என்பதாலும், போக்குவரத்திற்கு இடையூறாக இருப்பதாலும் திருக்கோவிலுக்கு வரும் வாகனங்கள் நிறுத்தம் செய்வதற்காக திருக்கோவிலின் அருகில் இடம் ஒதுக்கீடு செய்யப்பட வேண்டிய அவசியத்தை கருத்தில் கொண்டு திருக்கோவிலுக்கு மிக அருகாமையில் கிழ் பகுதியில் அமைந்துள்ள திருநீலகண்டர் ஊரணியின் மேல்புறம் தற்போது விரிவாக்கம் செய்யப்பட்டுள்ள சாலையின் கீழ்பகுதயில் நிறுத்தம் செய்வதற்கு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி மூலம் நடவடிக்கை மேற்கொள்ளவும், அதற்காக தயார் செய்யப்பட்டுள்ள

குத்தகை உரிமம் கட்டணங்கள் மற்றும் வைப்புத்தொகை மன்றத்தின் அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

**யாத்திரிர்கள் வாகனங்கள் மற்றும் வெளியூர் வாகனங்களுக்கு கீழ்கண்ட விபரப்படி கட்டணம்**

1. கார் ஒன்றிற்கு - ரூ.50/- (ரூபாய் ஐம்பது மட்டும்)
2. வேன் / மினி வேன் ஒன்றிற்கு - ரூ.80/- (ரூபாய் எண்பது மட்டும்)
3. சுற்றுலா பேருந்து மற்றும் பேருந்து ஒன்றிற்கு - ரூ.100/- (ரூபாய் நூறு மட்டும்)

| **வ.எண்.** | **குத்தகை உரிமம் இனம்** | **செலுத்தப்பட வேண்டிய ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளிக்கான பொறுப்பு தொகை** | **குத்தகை காலம்** |
|---|---|---|---|
| 1. | திருநீலகண்டர் ஊரணியின் மேல்புறம் விரிவாக்கம் செய்யப்பட்டுள்ள பகுதியில் சுந்தரர் தெரு கீழ்பகுதியில் அமைந்துள்ள விநாயகர்கோவிலின் தென்பகுதியில் வெளியூர் மற்றும் யாத்திரீர்கள் வாகனங்களுக்கு சுங்கம் வசூல் செய்யும் உரிமம். | ரூ.3.00/- (ரூபாய் மூன்று லட்சம்) | ஒப்படைக்கும் நாள் முதல் 31.03.2021 வரை உள்ள காலத்திற்கு |

தீர்மானம் – அனுமதிக்கப்படுகிறது

**பொருள் எண்- 815**

சங்கரன்கோவில் நகராட்சி பகுதியில் வடகிழக்கு பருவமழையின் காரணமாக நகர்பகுதியில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கை மேற்கொள்ளுவதற்கும், முதிர் கொசுக்களை அழிப்பதற்கு பயன்படுத்தப்பட்டு வரும் Mini Indoor hand foggin machine இரண்டு எண்ணங்கள் பழுதடைந்துள்ளதால், புதிதாக 10 எண்ணம்` Mini Indoor hand foggin machine மற்றும் அதற்குரிய எரிபொருள் (mini cylinder) 500 எண்ணம் வாங்குவதற்கு துப்புரவு ஆய்வாளர் அறிக்கை குறிப்பிட்டுள்ளார்.

எனவே, மேற்கண்ட விபரப்படி இயந்திரம் வாங்கவும் அதற்கான செலவினம் ரூ.5.00/- லட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

தீர்மானம் – அனுமதிக்கப்படுகிறது

**பொருள் எண்- 816**

இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் திடக்கழிவு மேலாண்மை பணிக்காக திருவேங்கடம் சாலை மீரான் சேட் காலனி வாரச்சந்தை தெரு ஆகிய 3 இடங்களில் பசுமை நுண் உரக்குடில் திறக்கப்பட்டு தினசரி குப்பைகள் உரமாக்கும் பணி நடைபெற்று வருகிறது. மேற்படி 3 இடங்களில் அன்றாடப் பணிகளை மேற்கொள்ளுவதற்கு கீழ்காணும் பொருட்கள் கூடுதலாக தேவைப்படுகிறது. எனவே கீழ்கண்ட பொருள்களை வாங்க உத்தேச செலவினம் ரூ.8,00,000/- மன்ற அனுமதிக்காக.

| | | |
|---|---|---|
| 1. | Mechanical Seiver | 3 Nos |
| 2. | Stitching Machine | 3 Nos |
| 3. | Bailing Machine | 1 Nos |

| | | |
|---|---|---|
| 4. | Bio-Shredder | 2 Nos |

**அலுவலகக் குறிப்பு**

பொருளில் கண்ட பணியினை மேற்கொள்ள பொது நிதியிலிருந்து செலவு செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானம் – அனுமதிக்கப்படுகிறது

**பொருள் எண்- 817**

சங்கரன்கோவில் நகராட்சிக்குட்பட்ட 30 வார்டுகளில் கோட்டைமலையாறு, தாமிரபரணி மற்றும் மானூர் I, II ஆகிய மூன்று கூட்டு குடிநீர் திட்டங்கள் மூலமாக வடிகால் வாரியம் மூலம் குடிநீர் பெறப்பட்டு மூன்று மேல்நிலை தொட்டிகளுக்கு Gas chlorination Plant and Liquid clorination plant ஆகியவற்றிற்கு தேவையான Gas clorine cylinder மற்றும் Liquid clorine வாங்குவதற்கு ரூ.5,00,000/-க்கு பணியை மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்பட்டதில் 27.09.2019-ல் வரப்பெற்ற கீழ்கண்ட வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் Excellent chloro systems என்ற நிறுவனம் மதிப்பீட்டு விலை ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளது. எனவே, மேற்படி குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள Excellent chloro systems நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியையும் மன்ற அனுமதியினை எதிர்நோக்கி முன் அனுமதியுடன் ஒப்பந்தப்புள்ளி கோரிய மன்ற தொடர் நடவடிக்கை மேற்கொண்டமைக்கும் அனுமதிக்கலாம்.

| வ.எண். | நிறுவனத்தின் பெயர் | மதிப்பீட்டு தொகை | மதிப்பீட்டுத் தொகையை விட | |
|---|---|---|---|---|
| | | | கூடுதல் | குறைவு |
| 1. | Excellent chloro systems | ரூ.5,00,000/- | மதிப்பீட்டுக்குச் சமம் | |
| 2. | Sri Sathya dyen Chemicals | ரூ.5,00,000/- | 3.89% | ---- |

தீர்மானம் – அனுமதிக்கப்படுகிறது

**பொருள் எண்- 818**

சங்கரன்கோவில் நகராட்சியில் தமிழ்நாடு நகர்ப்புற சாலை மேம்பாட்டுத்திட்டத்தின் கீழ் கழுகுமலை சாலையிலிருந்து திருவேங்கடம் சாலை வரை சாலை பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேற்படி சாலையில் நகர்புறம் 2ல் உள்ள 4 (நான்கு) மின்மாற்றிகள் 3 (மூன்று) மின் கம்பங்கள் மற்றும் நகர்புறம் 1ல் 1 (ஒரு) மின்மாற்றிகள் 3 (மூன்று) மின் கம்பங்கள் நகராட்சிக்கு சொந்தமான இடத்தில் அமைந்து போக்குவரத்திற்கு இடையூராக உள்ளது. மேலும், தமிழநாடு மின்சார வாரியம் நகர்ப்புறம் 1 மற்றும் நகர்ப்புறம் 2லிருந்து வரப்பெற்ற கடிதத்தில் மதிப்பீட்டுத தொகை ரூ.56,8455/- செலுத்த தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்படி தொகையை செலுத்த மன்ற அனுமதிக்காக.

1. நகர்ப்புறம் 1 மதிப்பீட்டுத்தொகை - ரூ.26,9130/-
2. நகர்ப்புறம் 1 மதிப்பீட்டுத்தொகை - ரூ.18,5310/-
3. நகர்ப்புறம் 2 மதிப்பீட்டுத்தொகை - ரூ.11,0430/-
4. தற்காலிக மின் துண்டிப்பு தொகை- ரூ.3585/-

**அலுவலகக்குறிப்பு**

பணியாளர் அவசியம் கருதி முன் அனுமதியுடன் தொடர் நடவடிக்கை மேற்கொண்டமைக்கும் பொருளில் கண்ட பணியினை மேற்கொள்ள பொது நிதியிலிருந்து செலவு செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானம் – அனுமதிக்கப்படுகிறது

**பொருள் எண்- 819**

சென்னை தலைமை செயலகத்தில் 31.10.2019 அன்று நடைபெற்ற பத்தாவது மாநில உயர் அதிகார குழு (10th State High Powered Committee) கூட்டத்தில் சங்கரன்கோவில் நகராட்சியில் தூய்மை இந்தியா திட்டம் (Swachh Bharat Mission) 2019-2020 திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் மத்திய அரசு பங்குத்தொகை சுவாஜ் பாரத் நிதி ரூ.6.30 இலட்சம் (35%) மாநில அரசு பங்கு தொகை ரூ.9.90 இலட்சம் (55%) மற்றும் நகராட்சி பங்கு தொகை ரூ.1.80 இலட்சம் (10%) ஆக மொத்தம் ரூ.18.00 இலட்சம் Resource Recovery Centre அமைக்க நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள விபரம் மன்றத்தின் பார்வைக்கும் மேற்படி திட்டத்தின் கீழ் வார்டு எண்.12, அம்பேத்கார் நகர் பகுதியில் Resource Recovery Centre அமைக்க ரூ.18.00 இலட்சம் மதிப்பீட்டில் பணி மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட மதிப்பீடு மன்றத்தின் அனுமதிக்கும் நகராட்சி பங்கு தொகையினை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு

**அலுவலகக்குறிப்பு**

பொருளில் கண்ட பணியினை மேற்கொள்ள மத்திய அரசு பங்குத்தொகை சுவாஜ் பாரத் நிதி ரூ.6.30 இலட்சம் (35%) மாநில அரசு பங்கு தொகை ரூ.9.90 இலட்சம் (55%) மற்றும் நகராட்சி பங்கு தொகை ரூ.1.80 இலட்சம் (10%) ஆக மொத்தம் ரூ.18.00 இலட்சம் நிதியிலிருந்து செலவு செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானம் – அனுமதிக்கப்படுகிறது

**பொருள் எண்- 820**

இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் திடக்கழிவு மேலாண்மை பணிக்காக திருவேங்கடம் சாலை மீரான் சேட் காலனி வாரச்சந்தை தெரு ஆகிய 3 இடங்களில் பசுமை நுண் உரக்குடில் திறக்கப்பட்டு தினசரி குப்பைகள் உரமாக்கும் பணி நடைபெற்று வருகிறது. மேற்படி 3 இடங்களில் அன்றாடப் பணிகளை மேற்கொள்ளுவதற்கு கீழ்காணும் பொருட்கள் கூடுதலாக தேவைப்படுகிறது. எனவே கீழ்கண்ட பொருள்களை வாங்க உத்தேச செலவினம் ரூ.4,00,000/- மன்ற அனுமதிக்காக.

| | | |
|---|---|---|
| 1. | Fly control | 12 Nos |
| 2. | Exhaust fan | 12 Nos |
| 3. | Table | 3 Nos |
| 4. | Ceiling Fan | 9 Nos |
| 5. | Segregation sheet (10x12 inches) | 18 Nos |
| 6. | 25kg sack with Municipal Name & Emblem | 1000 Nos |
| 7. | Electronic weighing machine | 2 Nos |
| 8. | Chair | 12 Nos |
| 9. | Ro system | 3 Nos |

| | | |
|---|---|---|
| 10. | Storage bins (1000kg capacity) | 30 Nos |

**அலுவலக்குறிப்பு**

பொருளில் கண்ட பணியினை மேற்கொள்ள பொது நிதியிலிருந்து செலவு செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானம் – அனுமதிக்கப்படுகிறது

**பொருள் எண்- 821**

சங்கரன்கோவில் நகராட்சிக்குட்பட்ட மீரான் சேட் காலனியில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தில் குப்பைகள் சேகரம் செய்யப்பட்டு நுண்ணுயிரி உராமக்கும் திட்டத்தின் கீழ் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. MCC (Micro Compost Center) முன்பக்க கேட் மற்றும் தண்ணீர் வசதிகள் மழைநீர் சேகரிப்பு பணிகள் மேற்கொள்ள வேண்டியுள்ளது. மேற்படி பணியினை மேற்கொள்ள மதிப்பீடு தொகை ரூ.1,50,000/-க்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்ற அனுமதிக்காக.

தீர்மானம் – அனுமதிக்கப்படுகிறது

**அலுவலகக்குறிப்பு**

பொருளில் கண்ட பணியினை மேற்கொள்ள பொது நிதியிலிருந்து செலவு செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானம் – அனுமதிக்கப்படுகிறது

**பொருள் எண்- 822**

சங்கரன்கோவில் நகராட்சி பொது நிதியின் கீழ் வாரச்சந்தை தெருவில் Resource Recovery center அமைக்க ரூ.3.00/- இலட்சத்தில் மேற்கொள்ள தீர்மான எண். ஒப்பந்தப்புள்ளி வரவேற்கப்பட்டதில் 27.09.2019-ல் வரப்பெற்ற கீழ்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | ஒப்பந்தக்காரர் பெயர் | மதிப்பீட்டுத் தொகை | மதிப்பீட்டுத் தொகையை விட | |
|---|---|---|---|---|
| | | | கூடுதல் | குறைவு |
| 1. | திரு.பி.சிவா ஒப்பந்தக்காரர் | ரூ.3,00,000 | மதிப்பீட்டுத்தொகைச்சமம் | |
| 2. | திரு.எஸ். கார்த்திசன் ஒப்பந்தக்காரர் | ரூ.3,00,000 | 0.45% | |

மேற்கண்ட பணியை மேற்கொள்ள வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் ஒப்பந்தக்காரர் திரு.பி.சிவா என்பவர் மதிப்பீட்டுத் தொகைக்குச்சமமாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளார். எனவே, மேற்படி குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்தக்காரர் திரு.பி.சிவா என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அங்கீகரிக்கலாம்.

தீர்மானம் – அனுமதிக்கப்படுகிறது

**பொருள் எண்- 823**

சங்கரன்கோவில் நகராட்சிக்குட்பட்ட அம்பேத்கார் நகர் தெருவில் கழிப்பிடம் அருகில் நகராட்சிக்கு சொந்தமான காலியிடத்தினை சுற்றி சுற்றுச்சுவர் அமைக்கும் பணி செய்வதற்கு ரூ.9.90 இலட்சத்திற்கு இந்நகர்மன்றத் தீர்மான எண்.803 நாள்.19.09.2019ன் அனுமதி பெறப்பட்டுள்ளது. அதனடிப்படையில் மேற்படி பணியினை மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்பட்டதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது. பெறப்பட்டுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலை விகிதத்தில் ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்தகாரர் திரு.கா.ராஜாமுகம்மது ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் அனுமதிக்கலாம்.

| வ.எண். | ஒப்பந்தக்காரர் பெயர் | மதிப்பீட்டுத் தொகை | மதிப்பீட்டுத் தொகையை விட | |
|---|---|---|---|---|
| | | | கூடுதல் | குறைவு |
| 1. | திரு.கா.ராஜாமுகம்மது | ரூ.9.90 இலட்சம் | மதிப்பீட்டு விலை | |
| 2. | திரு.கா.நிஜார் | ரூ.9.90 இலட்சம் | 4.90% | |

தீர்மானம் – அனுமதிக்கப்படுகிறது

**பொருள் எண்- 824**

சங்கரன்கோவில் நகராட்சிக்குட்பட்ட கழுகுமலை சாலையில் இருந்து திருவேங்கடம் சாலை வரை பிரிந்து செல்லும் டைவர்சன் சாலை (திருநீலகண்டர் ஊரணி அருகே) கிழக்குப்பகுதியில் நடைபாதை அமைக்கும் பணிக்கு ரூ.9.90 இலட்சத்திற்கு இந்நகர்மன்றத் தீர்மான எண்.802 நாள்.19.09.2019ன் அனுமதி பெறப்பட்டுள்ளது. அதனடிப்படையில் மேற்படி பணியினை மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்பட்டதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது. பெறப்பட்டுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலை விகிதத்தில் ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்தகாரர் திரு.கா.ராஜாமுகம்மது ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் அனுமதிக்கலாம்.

| வ.எண். | ஒப்பந்தக்காரர் பெயர் | மதிப்பீட்டுத் தொகை | மதிப்பீட்டுத் தொகையை விட | |
|---|---|---|---|---|
| | | | கூடுதல் | குறைவு |
| 1. | திரு.கா.ராஜாமுகம்மது | ரூ.9.90 இலட்சம் | மதிப்பீட்டு விலை | |
| 2. | திரு.கா.நிஜார் | ரூ.9.90 இலட்சம் | 5.20% | |

தீர்மானம் – அனுமதிக்கப்படுகிறது

**பொருள் எண்- 825**

சங்கரன்கோவில் நகராட்சிக்குட்பட்ட திருவேங்கடம் சாலையில் இருந்து பிரிந்து செல்லும் (டைவர்சன் சாலை நெல்லை மற்றும் கோவில்பட்டிக்கு செல்லும் பிரதான சாலை) கழுகுமலை சாலை வரை சாலையின் நடுப்பகுதியில் Cender Media அமைக்கும் பணிகள் செய்வதற்கு ரூ.9.90 இலட்சத்திற்கு இந்நகர்மன்றத் தீர்மான எண்.801 நாள்.19.09.2019ன் அனுமதி பெறப்பட்டுள்ளது. அதனடிப்படையில் மேற்படி பணியினை மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்பட்டதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது. பெறப்பட்டுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலை விகிதத்தில் ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்தகாரர் திரு.கா.ராஜாமுகம்மது ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் அனுமதிக்கலாம்.

| வ.எண். | ஒப்பந்தக்காரர் பெயர் | மதிப்பீட்டுத் தொகை | மதிப்பீட்டுத் தொகையை விட | |
|---|---|---|---|---|
| | | | கூடுதல் | குறைவு |
| 1. | திரு.கா.ராஜாமுகம்மது | ரூ.9.90 இலட்சம் | மதிப்பீட்டு விலை | |
| 2. | திரு.கா.நிஜார் | ரூ.9.90 இலட்சம் | 4.30% | |

தீர்மானம் – அனுமதிக்கப்படுகிறது

**பொருள் எண்- 826**

சங்கரன்கோவில் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.08 மாதாங்கோவில் தெருவில் உள்ள உடைந்த சிறுபாலத்தை அகற்றிவிட்டு புதியதாக பாலம் மற்றும் பெயர்பலகை வைக்கும் பணிக்கு ரூ.9.85 இலட்சத்திற்கு இந்நகர்மன்றத் தீர்மான எண்.801 நாள்.19.09.2019ன் அனுமதி பெறப்பட்டுள்ளது. அதனடிப்படையில் மேற்படி பணியினை மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்பட்டதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது. பெறப்பட்டுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலை விகிதத்தில் ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்தகாரர் திரு.கா.ராஜாமுகம்மது ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் அனுமதிக்கலாம்.

| வ.எண். | ஒப்பந்தக்காரர் பெயர் | மதிப்பீட்டுத் தொகை | மதிப்பீட்டுத் தொகையை விட | |
|---|---|---|---|---|
| | | | கூடுதல் | குறைவு |
| 1. | திரு.கா.ராஜாமுகம்மது | ரூ.9.85 இலட்சம் | மதிப்பீட்டு விலை | |
| 2. | திரு.கா.நிஜார் | ரூ.9.85 இலட்சம் | 2.20% | |

தீர்மானம் – அனுமதிக்கப்படுகிறது

ஒ.ம./பீ.முகைதீன்அப்துல்காதர்
தனி அதிகாரி மற்றும் ஆணையாளர்,
சங்கரன்கோவில் நகராட்சி. –

நாள். 29.11.2019